1982 மார்ச் 18]

குறுக்கே ஒரு குறுக்கு கம்பு போடப்பட்டிருக்கிறது. இதன்மேல் வழக்கொன்று பதிவாகி, ஆக்கிரமிப்பாளர்கள் நாகர்கோவில் முனிசீப் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளார்கள். ஆகவே அந்தத் தீர்ப்பை எதிர்பார்த்து இந்த வேலைகளெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-40)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தேவகிரி கரும்பாலைப் பகுதியிலே இருக்கக்கூடிய தோட்ட முதலாளிகள் அங்கே இருக்கின்ற பஞ்சாயத்து சாலைகளை அவர்களுடைய சொந்த சாலைகள் என்று சொல்லிக்கொள்கின்ற முறையிலே மக்களுக்கு அது போக்குவரத்துக்குத் தடையாக இருக்கின்றது. ஏற்கெனவே நீதிமன்றத்திலே அது அவர்களுக்குச் சொந்தமான இடம் அல்ல என்று தீர்ப்பு வந்ததற்குப் பிறகும் அந்த தோட்ட முதலாளிகள் ஏழை விவசாயிகளையும் தொழிலாளர்களையும் பக்கத்திலே உள்ள தோட்ட உடைமையாளர்களையும் செல்வதற்கு அனுமதிக்காத நிலை இருக்கிறது. தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தின்படியும் தொழிலாளர்களும் அவர்களின் சொந்தக்காரர்களும் தோட்டங்களுக்குச் செல்வதற்கு சட்டப்பூர்வமான அனுமதி இருக்கக்கூடிய காரணத்தினால் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்காமலேயே மக்கள் செல்வதற்கான வசதியை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகு தான் நடவடிக்கை எடுக்க முடியும்.

கரசமங்கலம் பஞ்சாயத்துக்குச் சொந்தமான கருங்கல் பாறைகளை அனுமதியில்லாமல் உடைப்பதைத் தடுக்கும் திட்டம்.

* வினா எண். 539—திரு. என். எ. பூங்காவனம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் காட்பாடித் தொகுதி கரசமங்கலம் பஞ்சாயத்துக்குச் சொந்தமான கருங்கல் பாறைகளை ரயில்வேயில் காண்ட்ராக்ட் எடுத்தவர்கள், அனுமதி பெறாமல் பாறைகளை உடைத்துக்கொண்டு போவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) இது பற்றிய புகார் யாதும் அரசின் கவனத்துக்கு வரவில்லை; இருப்பினும் மாவட்ட ஆட்சியர் அனுமதி இல்லாமல் பாறை

களை உடைத்துக் கொண்டு போவது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என்றும், கிராம சிப்பந்திகள் இதைக் கண்காணித்து வருகின்றனர் என்றும் அறிவித்துள்ளார்.

திரு என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, கரிச மங்கலம் பகுதியிலே நீண்டகாலமாக ரயில்வேயில் கான்ட்ராக்ட் எடுக்கிறவர்கள் பாறைகளை உடைத்துக் கொண்டு வருகிறார்கள் என்று தாசில்தார், பி.டி.ஓ. மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட பலருக்கு எழுதப்பட்டிருக்கிறது. அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் புகார் வரவில்லை என்று சொல்கிறார்கள். நானே 2, 3 கடிதங்களை எழுதியிருக்கிறேன். கான்ட்ராக்ட் எடுக்கக்கூடியவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பாறைகள் அனுமதியில்லாமல் உடைத்து எடுத்துச் செல்வது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்ற நிலைமை இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் உடைத்து எடுத்துச் சென்று இருக்கிறார்களே, அவர்கள் எத்தனை ஆண்டுக்காலம் எத்தனை மாதங்கள் எடுத்துச் சென்றார்கள் என்று கண்டுபிடித்து அவர்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: அப்படிச் செய்திருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு இல. பலராமன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற பாறைகள் வருவாய்த் துறைக்கும் பஞ்சாயத்து ஒன்றியங் களுக்கும் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. அங்கே நிர்வாகம் இல்லாததின் காரணமாக ஒன்றியத் தலைவர்கள் இல்லாததன் காரணமாக ஏலம் விடாததின் காரணமாக யார் யார் உடைத்து எடுத்துச் செல்கிறார்கள் என்று அரசுக்குத் தெரியாமல் போகிறது. ஆண்டுதோறும் ஏலம் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் ஒன்றிய மன்றங்கள் மூலமாக அந்த அந்தப் பகுதிகளுக்குட்பட்ட பாறைகள் ஏலம் விடப்பட்டிருக் கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லையென்ற காரணத்தினால் ஆண்டு தோறும் ஏலம் விடாமல் நிறுத்திவைக்கப் படவில்லை. ஏதாவது நிறுத்திவைக்கப்பட்டது என்று புகார் தங்களிடத்திலே இருந்தால் அதை என்னிடத்திலே கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.